# பெறுகைகளுக்கான அறிவித்தல்(2021/08)
# வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்
# Tower Server and Online UPS ற்கான பெறுகை

தவிசாளர், திணைக்கள பெறுகைக் குழுவினால் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு Tower Server and Online UPS வழங்குவதற்கு தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மூடிய கடித உறையில் (பொறியிடப்பட்ட) விலைமனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. தேவையான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| இல | விபரம் | எண்ணிக்கை | கேள்வி அடையாள இல | விலைக் கேள்வி பிணை | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | **Tower Server**<br>**Online UPS 3KVA** | **09**<br>**09** | **NP/21/05/TS/2021/08** | **60,000/-** | **2,000/-** |

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன், குறித்த பொருட்களை வழங்குவதற்கான செல்லுபடியான வியாபாரப் பெயர்ப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு, விலைமனுதாரர்கள் விலைக் கேள்வி ஆவணத்தில் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ் முகவரியிலே வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை பரிசீலிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை, அலுவலக வேலை நாட்களில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம எனும் முகவரியில் **02.08.2021** ஆம் திகதி தொடக்கம் **23.08.2021** ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
6. பெறுகை ஆவணங்கள் **24.08.2021ம்** திகதி மு.ப **10.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் கால தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
7. இவ் விலைமனுக் கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுக் கோரலை ரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**தவிசாளர், திணைக்கள பெறுகைக் குழு (பெரிது),**
**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடமாகாணம்**
**சுகாதாரக்கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம், 40000.**

021-222-0812, 021-222-0839 www..np.gov.lk தொலைநகல்:021-221-7905 மின்னஞ்சல்:capdhsnp@gmail.com